www.tamilarangam.net

# 13 அரசியல் தொடர்

## அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



பிரிகேடியர் வீரதுங்க

# பிரபாமீது அமுதரின் நம்பிக்கை!

### தொண்டர்கள் பாய்ந்தனர்

மாநாட்டில் துண்டுப் பிரசுரம் விநியோகித்த இளைஞர்களை தமக்கு எதிரானவர்கள் என்றே அமிர் தீர்மானித்து விட்டார்.

"தொண்டர்களே என்ன செய்கிறீர்கள்?" என்று அமுதர் ஒலிபெருக்கியில் கேட்டது தனது ஆதரவாளர்களை உசுப்பிவிடுவதற்காகத்தான்.

கூட்டத்தின் மத்தியில் இருந்து ஒரு தொண்டர் எழுந்தார். அவரை ஒரு குண்டர் என்றும் வர்ணிக்கலாம். வாட்ட சாட்டமாக இருந்தார்.

பிரசுரம் விநியோகித்து கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவரை சட்டையில் பிடித்து ஒரு அடிகொடுத்து பிரசுரங்களைப் பறித்தார் அந்த தொண்டர்.

அடி வாங்கியவரின் பெயர் சுந்தரலிங்கம். அவரது மூக்குக் கண்ணாடியும் பறிக்கப்பட்டது.

மேடையில் இருந்து இவற்றையெல்லாம் அவதானித்துக்கொண்டிருந்தார் தளபதி அமிர்.

பிரசுரம் விநியோகித்தவரை தாக்கிய தொண்டரை அழைத்து பேச நினைத்தார்கள் சம்பந்தப்பட்ட இளைஞர்கள்.

கூட்டத்தின் மத்தியில் சென்று அந்த தொண்டரை 'பேசவேண்டும் வாருங்கள்' என்று அழைத்து வந்தார்கள்.

வந்தார் தொண்டர்; பேசவில்லை. பிரசுரம் கொடுத்த இளைஞர்கள்மீது அந்த தொண்டர் தாக்குதலை ஆரம்பித்து வைத்தார்.

கூட்டணி விசுவாசிகளால் சுற்றி வளைத்து தாக்கப்பட்டார்கள் ஊர்வலம் வந்த இளைஞர்கள்.

ஈழ விடுதலை இயக்கத் தலைவர் முத்துக்குமாரசாமி, அதே இயக்கத்தில் இருந்த கோவை நந்தன் போன்றவர்கள் தமது ஆட்கள் தாக்கப்பட்டதை தடுக்கவும் பயந்து கூட்டத்திற்குள் பதுங்கிக்கொண்டார்கள்.

அமுதரின் தொண்டர்களாக தாக்குதல் நடத்தியவர்களில் முக்கியமானவர் பரந்தன் ராஜன்.

இவர்தான் புளொட் அமைப்பில் இருந்து விலகி ஈ.என்.டி.எல்.எஃப். என்னும் அமைப்பிற்கு தலைவராக இருந்தவர். சொந்தப் பெயர் ஞானசேகரன்.

ஞானசேகரன் மட்டுமல்ல பிரபாகரன் உட்பட தமிழ் இயக்கங்களது தலைவர்களாகவும், முக்கியமானவர்களாகவும் இருந்தவர்கள், இருப்பவர்கள் பலரும் ஆரம்பத்தில் அமுதரின் விசுவாசிகளாகவே இருந்தார்கள்.

### வாயடைக்கும் தந்திரம்

ஆவரங்கால் மாநாட்டில் தமிழீழ தேசிய மன்றத்தை கூட்டுவதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டது.

கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்கக் கோர்வை தயாரிக்கவும் ஒரு குழு நியமிக்கப்பட்டது.

இந்த இரண்டு குழுக்களிலுமே வண்ணை ஆனந்தன் இடம்பெற்றார்.

இது ஒரு சிறந்த தந்திரம். சில கருத்துக்கள் உரமாக முன்வைக்கப்படும் போது அதனை ஏற்பதுபோல நடிப்பது. ஆனால் நிறைவேற்றாமல் இருந்து விடுவது.

கருத்து முன்வைப்போரை சமாளிக்க ஒரு கமிட்டி அமைத்து அந்த் கமிட்டியில் அவர்களையும் உறுப்பினர்களாக போட்டுவிடுவது.

"தமிழீழ தேசிய மன்றத்தை கூட்டு" என்றார் வண்ணை ஆனந்தன். அதனால் அந்த மன்றத்தை கூட்டும் குழுவில் அவரும் ஒருவராக இருப்பதால் இனி சத்தம் போடமாட்டார்.

இளைஞர்களை தந்திரமாக சமாளிக்க தலைவர்கள் கையாண்ட தந்திரங்களில் இதுவும் ஒன்று.

வண்ணை ஆனந்தன் பின்னர் வாயே திறக்கவில்லை. சர்வதேச பிரசாரம் நடத்த வென்று ஜெர்மனுக்கு சென்று அங்கு நிரந்தரமாக தங்கிவிட்டார்.

✔ மரம் பழுத்தால் வெளவால் வரும் என்றவர் பழுக்க முன்னரே பறந்துவிட்டார்.

### இளைஞர் பேரவையில் பிளவு

இளைஞர்களை கட்டப்படுத்த தளபதி அமிர் அடிக்கடி கூறும் வார்த்தை ஒன்று மிகப் பிரபலமானது.

**"போர் களத்தில் தளபதியின் கட்டுப் பாட்டை மீறி முன்னால் ஓடுபவனுக்குத்தான் முதல் சூடு!"**

மிக உண்மையான கருத்துத்தான்! ஆனால் 1977ல் ஜெயவர்த்தனா அரசாங்கம் பதவிக்கு வந்தது. தளபதி மௌனமானார்.

ஜே.ஆர்.புத்திசாலி. புன்னகை செய்தே எதிரிகளை நிராயுதபாணிகளாக்கிவிடுவார்.

1977இன் பின்னர் பொதுமக்கள் பங்கு கொள்ளும் அகிம்சை போர்க்களம் எதற்கும் தளபதி அமிர் அழைப்பு விடுக்கவேயில்லை. அரசுக்கு அறிவித்துவிட்டு சுவரொட்டி ஒட்டி துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கைதாகும் போராட்டங்கள் மட்டுமே ✔ நடத்தினார்கள்.

# வீரதுங்காவுக்கு ஜே. ஆர். போட்ட உத்தரவு

'போர்க்களத்தில்தானே முன்னால் ஓடக்கூடாது போர்க்களமே இல்லையே, பின்னர் தளபதியின் கட்டளைக்கு எங்கே இடம்?'

என்று நினைத்தார்களோ என்னவோ 78ம் ஆண்டில் யாழ் முற்றவெளியில் தமிழ் இளைஞர் பேரவை ஒரு கூட்டம் நடத்தியது.

அதற்கு தலைமை தாங்கியவர் சந்ததியார்.

இவர்தான் பின்னர் புளொட் அமைப்பின் தலைவர்களில் ஒருவராக இருந்து உள் முரண்பாட்டால் கொல்லப்பட்டவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை மீது நம்பிக்கையீனம் தெரிவித்து கூட்டத்தில் பேசப்பட்டது.

"தேர்தலுக்காகவே 'தமிழ் ஈழக் கோசம்' தலைவர்களுக்கு தேவைப்படுகிறது."

என்றெல்லாம் கூட்டத்தில் பேசியவர்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள்.

"தமிழ் இளைஞர் பேரவை இனி தனி வழியே செல்லும்" என்றார் சந்ததியார்.

தமிழ் இளைஞர் பேரவை தலைவராக இருந்தவர் மாவை சேனாதிராஜா.

அமுதர் விசுவாசியாக இருந்த மாவை சேனாதிராஜா மூலமாக தமிழ் இளைஞர் பேரவை தனி வழி செல்லாமல் தடுத்தார் அமுதர்.

இளைஞர் பேரவையில் இருந்து சந்ததியார், இரா.வாசுதேவா, இறைகுமாரன், யோகநாதன் போன்ற பலர் வெளியேறினார்கள்.

தமிழ் இளைஞர் பேரவை (விடுதலை அணி) என்ற பெயரில் அவர்கள் தனி அமைப்பாக இயங்கத் தொடங்கினார்கள்.

### கோவை மகேசன்

தந்தை செல்வநாயகத்தால் தமிழரசுக் கட்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை சுதந்திரன்.

பின்னர் தினபதி ஆசிரியராக இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியையும், ஈழப் போராட்டத்தையும் கண்டித்தும் கேலி செய்தும் எழுதியவர் சிவநாயகம். இவர்தான் முதலில் சுதந்திரன் ஆசிரியராக இருந்தவர்.

அதன் பின்னர் சுதந்திரன் ஆசிரியராக இருந்தவர் கோவை மகேசன்.

கோப்பாய் தொகுதியைச் சேர்ந்த மகேஸ்வர சர்மா தனது பெயரை சுருக்கி கோவை மகேசன் என்று வைத்துக் கொண்டார்.

தமிழரசுக் கட்சியின் ஏடாக இருந்த சுதந்திரன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் குரலாக மாறியது.

'அரசியல் மடல்' என்ற பெயரில் கோவை மகேசன் எழுதிய கட்டுரைகள் இளைஞர்கள் மத்தியில் எழுச்சி விதைகளை தூவியதை மறுக்க இயலாது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு தளபதி அமிர், தமிழீழ முதல்வர் அமிர், சிந்தனைச் சிற்பி, கர்மவீரர், எல்லைக்காவலன், உடுப்பிட்டிச் சிங்கம், (பின்னர் திரு சிவசிதம்பரம் நல்லூர் தொகுதியில் தேர்தலில் நின்றதால் உடுப்பிட்டிச் சிங்கம் என்ற பட்டம் வாபஸ் பெறப்பட்டது) உணர்ச்சிக் கவிஞர், அடலேறு போன்ற பட்டங்களை பிரபலமாக்கியதும் சுதந்திரன்தான்.

அமிர்தலிங்கம் கூட்டத்தில் பேசினால் சுதந்திரன் இப்படித்தான் செய்தி போடும்;

**"தமிழீழ முதல்வர் அமிர் முழக்கம்!"**

மு.சிவசிதம்பரம் அரசைக் கண்டித்தால் அந்த வார சுதந்திரன் செய்தி இப்படி வரும்;

**"உடுப்பிட்டி சிங்கம் சிறீலங்கா அரசுக்கு எச்சரிக்கை."**

அதேபோல தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் எதிரிகளை அக்குவேறு ஆணிவேறாக கிழிப்பதிலும் சுதந்திரன் முன்னால் நின்றது.

### சுதந்திரன் பாய்ச்சல்

அந்த சுதந்திரன் பத்திரிகைதான் 1977இன் பின்னர் கூட்டணி தலைவர்களது போக்கு சரியில்லை என்று எழுதத் தொடங்கியது.

கூட்டணித் தலைவர்கள் ஜே.ஆர். பின்னால் சென்று சுதந்திரப் பயிரை வாட வைக்கிறார்கள் என்று வருத்தப்பட்டார் கோவை மகேசன்.

தனது அரசியல் மடலில் கோவை மகேசன் வருத்தத்தோடு நினைவூட்டிய பாரதியார் பாடல் வரிகள் இவை:

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம்?
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்; கருகத்
திருவுளமோ?"

இவற்றையெல்லாம் கூட்டணித் தலைவர்கள் கண்டுகொள்ளவேயில்லை.

அமுதர் என்ன சளைத்தவரா? திருவள்ளுவரை உதவிக்கு அழைத்து, **"மாற்றான் வலியும் தன் வலியும் அறிந்தே போர் செய்யவேண்டும். திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார். தம்பிமாருக்கு தெரியவில்லையே"** என்றார்.

இளைஞர்களது கோபத்தை அமுதர் அலட்சியம் செய்தமைக்கு ஒரு காரணம் இருக்கிறது.

புலிகள் இயக்கம் தனது கையை விட்டுப் போகாது என்று அமிர் நம்பியிருந்தார்.

அப்போது தம்பி, கரிகாலன் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டவர் பிரபாகரன்.

தம்பியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்று நினைத்தார் அமிர்.

அதனால் பிரபாகரனுடன் நெருக்கமான தொடர்புகளையும் வைத்திருந்தார்.

### அடக்குமுறைச் சட்டம்

இதே நேரத்தில் 1979ம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா படு மோசமான ஒரு சட்டத்தை கொண்டுவந்தார்.

78ம் ஆண்டு ஜே.ஆர்.அரசு கொண்டு வந்த புலிகள் தடைச் சட்டத்தை விடவும் மிகக் கடுமையான தடைச் சட்டம் அது.

1979ம் ஆண்டு ஜூலை 29ம் திகதி அமுலுக்கு கொண்டுவரப்பட்ட அச்சட்டம் 'பயங்கரவாத தடைச் சட்டம்' என்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜூரிமார் இல்லாமல் வழக்கு விசாரணை நடத்த அந்தச் சட்டம் அனுமதித்தது.

18 மாத காலத்திற்கு சந்தேக நபர் ஒருவரை வெளியுலக தொடர்பே இல்லாமல் சிறையில் வைத்திருக்கவும் வழி செய்தது.

சித்திரவதை மூலம் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை சான்றாக பாவிக்க நீதிமன்றத்திற்கு அனுமதியளித்தது.

எவர் வீட்டுக்குள் புகுந்தும் தேடுதல் நடத்தலாம். எவரையும் கைது செய்யலாம்.

சுருக்கமாக சொன்னால் தமிழ் பேசும் மக்களது போராட்டத்தை ஈவிரக்கமற்ற முறையில் கொலை செய்ய ஜே.ஆர். கொண்டுவந்த சட்டம் அது.

ஆயுதப் படைகளது கரங்களை சுதந்திரமாக்கி வடக்கில் ஒரு வேட்டைக்கான மறைமுக அனுமதி வழங்கப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நிறைவேற்றிய சூட்டோடு சூடாக யாழ்ப்பாணத்தில் அவசரகால நிலையை அரசு பிரகடனம் செய்தது.

பிரிகேடியர் வீரதுங்காவை அழைத்தார் ஜே.ஆர்.

**"யாழ் மாவட்ட பாதுகாப்பு படைகளின் முழுப் பொறுப்பும் உங்களுக்கு வழங்கப் படுகிறது. எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு (1979) முன்னர் நாட்டிலிருந்து, குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து வன்செயல் ஒழித்துக்கட்டப்படவேண்டும்"**

உத்தரவிட்டார் முப்படைத் தளபதியான ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

யாழ்ப்பாணம் சென்ற பிரிகேடியர் வீரதுங்கா சட்டத்தின் பலத்துடன் பயங்கரவாத ஆட்சி ஒன்றை நடத்திக்காட்டினார்.



சித்திரவதை முகாமில் எடுக்கப்பட்டு அரசின் மனித உரிமை மீறலுக்கு சர்வதேச அரங்கில் சாட்சியான புகைப்படம்.

### இன்பம்-செல்வம் கொலை

**வன்செயல் ஒழிக்கப்பட வேண்டும்!**

**யாழ். கமாண்டருக்கு உத்தரவு!!**

**அரசின் சகல துணைவளங்களைப் பயன்படுத்த ஜனாதிபதி ஆணை**

(நமது நிருபர்)

எதிர்வரும் டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்னர், நாட்டிலிருந்து, குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வன்செயல் அச்சுறுத்தல் சம்பவங்கள் அனைத்தையும் ஒழித்துக்கட்டுமாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா, [illegible] பாதுகாப்பு படைகளின் ஏக கமாண்டராக நியமிக்கப்பட்டிருக்கும் பிரிகேடியர் [illegible] உத்தரவிட்டுள்ளார்.

1979இல் வெளியான பத்திரிகைச் செய்தி

நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இன்பம்-செல்வம் உட்பட பல இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டு பிணமாக வீதியில் வீசியெறியப்பட்டனர்.

யாழ் குடாநாடு இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்தன. ஜே.ஆர். கண்டுகொள்ளவே யில்லை.

அடக்குவதாக நினைத்துக்கொண்டு தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தை நோக்கி தட்டி எழுப்பினார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

இயக்கங்களது முக்கிய தலைவர்கள் தமிழ் நாட்டுக்குத் தப்பிச் சென்றனர்.

1979-80 காலப் பகுதியில் ஆயுதமேந்திய இயக்க நடவடிக்கைகள் சற்றே ஓய்ந்திருந்தன.

1980இன் முற்பகுதியில் புலிகள் இயக்கத்திற்குள் ஏற்பட்ட பிளவும் அதற்கு ஒரு காரணம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட முதல் பிளவு அதுதான்.

ஐந்துபேர் கொண்ட செயற்குழுவே 1980இன் முற்பகுதிவரை புலிகளது தலைமையாக இருந்தது.

### பிரபாவின் வரையறைகள்

அந்த செயற்குழுவின் தலைவராக உமா மகேஸ்வரன் இருந்தார். இராணுவ தளபதியாகவும் செயற்குழு உறுப்பினராகவும் பிரபாகரன் இருந்தார்.

இதனை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். பிரபாகரன் சில கட்டுப்பாட்டு விதிகள், வரையறைகளை வகுத்தே செயற்பட்டு வந்தார்.

புகைபிடிக்கக்கூடாது- காதலிக்கக் கூடாது. வீண செலவுகள் கூடாது, இரகசியங்களை வெளியிடக் கூடாது, கட்டுப்பாட்டை மீறக்கூடாது போன்ற விடயங்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார் பிரபாகரன்.

ஆனால், உமா மகேஸ்வரன், நாகராசா போன்றவர்கள் இவற்றை விரும்பவில்லை.

இதே சமயம் ஊர்மிளாதேவி புலிகள் அமைப்பின் தீவிர உறுப்பினராக செயற்பட்டுக்கொண்டிருந்தார்.

ஊர்மிளாதேவி விடயத்தில் ஒரு பிரச்சனை ஆரம்பமானது.

(தொடர்ந்து வரும்)

### (எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி)

அது மட்டுமல்லாமல் மோதல் தவிர்ப்பை பயன்படுத்தி ஏனைய தமிழ் அமைப்புக்களை பலவீனப்படுத்தும் அல்லது செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையிலும் புலிகள் கவனம் செலுத்துகிறார்கள்.

அரசாங்கத்தோடு நட்பைப் பேண முடியும்; அரசாங்கத்தோடு இணைந்து செயல்பட முடியும் என்ற நம்பிக்கை புலிகளுக்கு இருந்தால் அரசாங்கத்தோடு இணைந்து நிற்கும் அமைப்புக்களை 'தேச விரோதிகள்' என்று சொல்லமாட்டார்கள்.

ஏனெனில் நாளை தாமும் அரசோடு இணைந்து செயற்பட வேண்டியிருக்கும் என்று நினைப்பார்கள்.

ஆக, மொத்தத்தில் புலிகளது நடைமுறைகள் அவர்கள் தமது கொள்கைகள் எதில் இருந்தும் சற்றும் இறங்காமல் இருப்பதை தெளிவுபடுத்துகின்றன.

போருக்கு சாவு மணி என்பது ஒரு கனவோ என்று நினைத்து வருந்த காரணங்கள் இல்லாமல் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்